பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 73

வெள்ளிக்கிழமை
07 பெப்ரவரி 2025

தை 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## இடமாற்றம்!

யாழ்ப்பாணம், பெப். 7
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர்கள் சிலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. புதிய இடமாற்றங்களின் அடிப்படையில் முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலாளராக திருமதி 14

# திஸ்ஸ விகாரையின் பின்னணியில் இராணுவமும் புலனாய்வுப் பிரிவுமே

### உதயனின் செய்தியை ஆதாரம்காட்டி கஜேந்திரகுமார் எம்.பி. சபையில் குற்றச்சாட்டு



**கொழும்பு, பெப்ரவரி 7**

**வடக்கில் இராணுவத்தாலும் புலனாய்வுப் பிரிவினராலும் நன்கு திட்டமிட்ட முறையில் இன்னமும் அடக்குமுறைகளும், ஆக்கிரமிப்புகளும் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.**
**தையிட்டி திஸ்ஸவிகாரை அதற்கு மிகச்சிறந்த உதாரணம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.** 14



## லசந்தவுக்கு நீதிகோரி நேற்று ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, பெப். 7
ஊடகவியலாளர் லசந்தவின் படுகொலைக்கு நீதிகோரியும், இந்தப் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை விடுதலை செய்வதற்கு சட்டமா அதிபர் பரிந்துரைத்தமைக்கும் எதிர்ப்புத் தெரிவித்து ஊடகவியலாளர்கள் நேற்றுப் போராட்டம் நடத்தி 12

இப்போதும்

## அர்ச்சுனா எம்.பி. பொதுச் சேவையில்

### மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அணைக்கப்பட்டது சத்தியக்கடதாசி

கொழும்பு, பெப். 7
நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா பொதுச்சேவையில் தற்போதும் உள்ளார் என்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சத்தியக்கடதாசி அணைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அவரின் நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மே மாதம் 14ஆம் திகதி விவாதத்துக்கு எடுக்கப்படும் என்று மேன்முறையீட்டு 15

ஆசாத் மௌலானா முன்வைத்த

## குற்றச்சாட்டுகள் எவற்றையும் அறியவில்லையாம் கோத்தா!

கொழும்பு, பெப். 7
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை நடத்தச் சதி செய்தார் என்று முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய மீது ஆசாத் மௌலானா என்பவர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்த நிலையில், 'அந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் எதுவும் தெரியாது' என்று கோத்தாபய தெரிவித்துள்ளார்.
ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காண 14

## இந்துக்களின் போர் இன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், பெப். 7
'இந்துக்களின் பெரும் சமர்' என வர்ணிக்கப்படுகின்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு இந்துக் கல்லூரிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. 15

வித்தியா படுகொலை!

## குற்றவாளிகளின் மேன்முறையீட்டை விசாரணைக்கு எடுக்கத் தீர்மானம்!

கொழும்பு, பெப். 7
யாழ்ப்பாணம் புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா படுகொலை செய்யப்பட்ட வழக்கில், மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளின் மேன் 14

## நியாயமான நிர்யணம் நெல்லுக்கு இல்லை!

கிளிநொச்சி, பெப். 7
நெல்லுக்கு நியாயமான முறையில் விலை நிர்ணயம் 14

அரகலய போராட்ட சொத்தழிவுகளுக்கு

## 43 நாடாளுமன்ற உறுப்பினர்கள் 122 கோடி இழப்பீடு பெற்றனராம்

கொழும்பு, பெப். 7
அரகலயவின்போது தமது சொத்துகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பீடு எனக்கூறி நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் 43 பேர் மொத்தமாக 122 கோடியே 41 லட்சத்து 34 ஆயிரம் ரூபாவை இழப்பீடாகப் பெற்றுள்ளனர்.
அரகலய போராட்டத்தைத் தொடர்ந்து நாடா 15



'ஒண்டு கூழுக்கு ஆசைப்பட வேணும், இல்லாட்டி மீசைக்கு ஆசைப்படோணும். மாறா நடந்தா ரெண்டுமே பறிபோகும் கண்டியளோ...'

தேசியக்கொடி அவமதிப்பு

## யாழ்.பல்கலை மாணவர்களை உடனடியாகக் கைதுசெய்க

### சரத் வீரசேகர வலியுறுத்து



கொழும்பு, பெப். 7
இலங்கையின் சுதந்திரதினத்தன்று யாழ். பல்கலைக்கழகத்தில் தேசியக்கொடியை கீழிறக்கி கறுப்புக் கொடியை ஏற்றியவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர வலியுறுத்தியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையின் சுதந்திரதினத்தன்று யாழ். பல்கலைக்கழகத்தில் தேசியக்கொடி 14

## பிரபாகரனை மீட்கவே முயன்றதாம் மேற்கு!



கொழும்பு, பெப். 7
பிரபாகரனை உயிருடன் கொண்டு செல்ல மேற்குலக நாடுகள் முற்பட்டன. அதற்கு மஹிந்த இடமளிக்கவில்லை. மேற்குலகைப் பகைத்துக்கொண்டு தான் மஹிந்த போரை முடித்துவைத்தார் என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக 15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 06.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 3981
ஆங்கில எழுத்து D
விசேட எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 01 12 13 79

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி 06.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1048
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 05 19 27 39

**NLB ஜய**
திகதி 06.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0007
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 1 6 4 8

**மெகா பவர்**
திகதி 06.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2087
ஆங்கில எழுத்து Y
சுப்பர் இலக்கம் 18
வெற்றி இலக்கங்கள் 03 23 42 65

**மஹஜன சம்பத**
திகதி 06.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5739
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 5 0 5 0 4 3

**தன நிதானய**
திகதி 06.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1769
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 33 39 65 72
விசேட எழுத்து T

**அத சம்பத**
திகதி 06.02.2025
சீட்டிழுப்பு இலக்கம் 314
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 5 0 4 3

# புதிய அரசமைப்பை எதிர்ப்போம்

## சரத் வீரசேகர தெரிவிப்பு



கொழும்பு, பெப்.7

**தற்போதைய சூழ்நிலையில் அரசியலமைப்பு மறு சீரமைப்புப்பணி இடம்பெறக்கூடாது. மீறி நல்லாட்சிக்கால அரசமைப்பு வரைவு கொண்டுவரப்பட்டால் அதனைக் கடுமையாக எதிர்ப்போம் என்று மஹிந்த ராஜபக்ச அணி உறுப்பினரான முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.
நல்லாட்சிக் காலத்தில் லால் விஜேநாயக்கவால் தயாரிக்கப்பட்ட அரசமைப்பு நகலை இறுதிப்படுத்தவே இந்த அரசாங்கம் முற்படுகின்றது. அந்த அரசமைப்பானது நாட்டை சமஷ்டியாக்கும் அரசமைப்பாகும். அந்த அரசமைப்பைக் கொண்டு வந்தால் நாம் அதனை எதிர்ப்போம்.
பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நாட்டில், அபிவிருத்தி பற்றியே கவனம் செலுத்தப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

**சுபிரி தன சம்பத**
திகதி 06.02.2025 | தினம் வியாழக்கிழமை
வெற்றி வாரம் 0447
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கம் 6 6 6 3 4 6
DLB

**Super Ball DLB**
திகதி 06.02.2025 | தினம் வியாழக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2713
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கம் 01 25 51 76

**சனிதா DLB**
திகதி 06.02.2025 | தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கம் 16 33 62 64
வெற்றி வாரம் 4874

**SASIRI DLB**
திகதி 06.02.2025 | தினம் வியாழக்கிழமை
வெற்றி வாரம் 0616
வெற்றி இலக்கம் 12 28 50

**லக்ன ராசி DLB**
திகதி 06.02.2025 | தினம் வியாழக்கிழமை
மீனம்
வெற்றி இலக்கம் 10 32 37 52
சீட்டிழுப்பு வாரம் 4425

**KAPRUKA DLB**
திகதி 06.02.2025 | தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து F
சுப்பர் இலக்கம் 05
வெற்றி இலக்கம் 08 38 60 74
வெற்றி வாரம் 1889

**அத கோடிபதி DLB**
திகதி 06.02.2025 | தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கம் 11 22 49 60
வெற்றி வாரம் 2539

## லசந்த படுகொலை; நீதியை நிலைநாட்டுக

### சஜித் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.7
லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பில் அரசாங்கம் தலையிட்டு வெளிப்படையான விசாரணை நடத்தி, கொலையாளிகளை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பில் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து நான் கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி பிரதமரிடம் கேள்வி எழுப்பியிருந்தேன்.
எனவே லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பில் வெளிப்படையான விசாரணையை நடத்தி, அவர்களது குடும்பத்தினருக்கும் ஊடகவியலாளர்களுக்கும் நீதி நியாயத்தை நிலைநாட்டி, கொலையாளிகளை சட்டத்தின் முன்நிறுத்தவேண்டும் - என்றார். (ச-இ)

## பெரமுனவுடன் கூட்டணியில்லை

### ஐ.ம.சக்தி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 7
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக்கட்சிதமது அணிக்குச் சவால் கிடையாது. கூட்டணி அமைப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் மாத்திரமே தற்போது பேச்சு நடத்தப்பட்டுவருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.
அனைவருக்கும் அரசியல் செய்யும் உரிமை இருக்கின்றது. அந்தவகையில் மொட்டுக் கட்சி செயற்படுகின்றது. அவர்களின் நடவடிக்கை எமக்குச் சவால் கிடையாது.
ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியையே கட்சி ஆதரவாளர்கள் விரும்புகின்றனர். சிலர் எதிர்த்தபோதிலும், பெரும்பாலானவர்கள் ஆதரவு நிலைப்பாட்டிலேயே உள்ளனர்.
ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைப்பதவியில் எவ்வித மாற்றமும் வராது. சஜித் பிரேமதாஸவே தலைவர். அவருக்கே மக்கள் ஆதரவு உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## மஹிந்தவின் மனுத்தாக்கல் மார்ச் 19 இல் விசாரணை




கொழும்பு, பெப்.7
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் முடிவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை அடுத்த மாதம் 19 ஆம் திகதி பரிசீலிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
மனுதாரர் மஹிந்த ராஜபக்ச சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, நீதிமன்றத்தின் முன் சாட்சியங்களை முன்வைத்து, எந்தவொரு பாதுகாப்பு மதிப்பீடும் இல்லாமல் தனது கட்சிக்காரரின் பாதுகாப்பைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார். முறையான பாதுகாப்பு மதிப்பீட்டுக்குப் பின்னர் அவரது பாதுகாப்பைக் குறைப்பதா அல்லது அதிகரிப்பதா என்பது குறித்து முடிவு எடுக்கப்படவேண்டும் என்றும் அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார். (ச-இ)

## ப.மிளகாய் கிலோ 1200/=

கொழும்பு, பெப்.7
சந்தையில் பச்சை மிளகாயின் விலை வரலாறு காணாத அளவுக்கு அதிகரித்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
அதன்படி ஒரு கிலோகிராம் பச்சை மிளகாய் விலை ரூ.1200 ஆக விற்பனை செய்யப்படுகிறது.
அதேவேளை, ஒரு கிலோகிராம் கறி மிளகாய் ரூ.1000 ஆகவும் அதிகரித்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-இ)

## தேங்காய்ச் சொட்டுகள் இறக்குமதிக்கு அனுமதி



கொழும்பு, பெப்.7
தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காக சுமார் 200 மில்லியன் தேங்காய்களுக்குச் சமமான கொள்ளளவைக் கொண்டுள்ள தேங்காய்ச் சொட்டுகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
நாட்டில் தெங்கு உற்பத்தி போதுமானளவு இன்மையால் உள்நாட்டு நுகர்வுக்காக சந்தையில் ஏற்பட்டுள்ள தேங்காய்த் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேய்ச்சல் தரவையின்றி இறக்கும் கால்நடைகள்

*மன்னாரில் அவலம்*

**மன்னார், பெப்.7**

**மன்னார் மாந்தை மற்றும் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மேய்ச்சல் தரை பிரச்சினை நீண்டகாலமாக நீடிக்கும் நிலையில் அண்மைக்காலமாக அதிகளவான கால்நடைகள் செத்து மடிக்கின்றன என்று கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

குறிப்பாக நாயாற்று வெளிப்பகுதியில் அதிகளவான மாடுகள் இறக்கின்றன. ஒரே பகுதிகளில் மாடுகள் மேய்ச்சலில் ஈடுபடுவதால் புற்களின்றி அவை பட்டினியால் உடல் மெலிந்து இறக்கின்றமை தெரியவந்துள்ளது.

இதனால் கால்நடைவளர்ப்பாளர்கள் பெரும் வாழ்வாதார இழப்பைச் சந்தித்து வருகின்றனர். மன்னார் மாவட்டச் செயலகத்தினால் மேய்ச்சல் தரைக்கு என பல வருடங்களுக்கு முன்பு ஒதுக்கப்பட்ட பல ஏக்கர் காணிகளை

அரச திணைக்களங்கள் தற்போது கையகப்படுத்தி வைத்துள்ளன.

எனவே எமது கால்நடைகளைப் பாதுகாப்பதற்கு மேய்ச்சல் தரவையைப் பெற்றுத்தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-56)

## 60 கிலோ கஞ்சாவுடன் இருவர் பூநகரியில் கைது

பூநகரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூநகரிப் பகுதியில் 60 கிலோ கஞ்சாவுடன் இருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பூநகரிப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய யாழ்ப்பாணப் பகுதியில் இருந்து புத்தளம் நோக்கிக் கொண்டுசெல்வதற்கு கூலர் வாகனமொன்றில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே குறித்த கஞ்சாப்பொதிகள் மீட்கப்பட்டன. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை சான்றுப்பொருள்களுடன் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பூநகரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நுவான் அசிரி தெரிவித்துள்ளார். (ச-113)

## கடவுச்சீட்டு அலுவலகம் 24 மணிநேர சேவை!

கொழும்பு, பெப்.7

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் 24 மணி நேரமும் இயங்கி, நாளொன்றுக்கு 4,000 கடவுச்சீட்டுக்களை வழங்குவதை உறுதி செய்வதற்காகக் கூடுதல் ஊழியர்களை நியமிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதற்கென குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திலிருந்து ஓய்வுபெற்ற அதிகாரிகளை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் பணியமர்த்தவும், பிற அரசுத் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் தற்காலிகமாக கடவுச்சீட்டுகளை வழங்கவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது (ச-இ)



## கட்டுத்துவக்குடன் ஒருவர் கைது

முல்லைத்தீவு, பெப். 7

முல்லைத்தீவு, சமலன்குளம் பகுதியில் கட்டுத்துவக்குடன் ஒருவர் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். வீடொன்றில் கட்டுத்துவக்கு பதுக்கிவைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைவாக இந்தக்கைது இடம்பெற்றது. சந்தேகநபரை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைஎடுத்துள்ளனர். (ச-125)

## காணாமற்போன மோ. சைக்கிள் வெற்றிலைக்கேணியில் மீட்பு

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணிப் பகுதியில் மூன்று மாதங்களுக்கு முன்பு காணாமற்போன மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று வியாழக்கிழமை மருதங்கேணிப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் காணாமற் போயுள்ளதாக அண்மையில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவந்த நிலையில் குறித்த மோட்டார் சைக்கிளை நித்தியவெட்டைக் காட்டுப்பகுதியில் இருந்து மீட்டுள்ளனர். இதுதொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்றும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-27-66)

## ஆஸி.பெற்றோலிய நிறுவனம் அதிருப்தியில் வெளியேற்றம்!

அவுஸ்திரேலிய எரிபொருள் விற்பனை நிறுவனமான யுனைற்றெட் பெற்றோலிய நிறுவனம் இலங்கையிலிருந்து வெளியேறத் தீர்மானித்துள்ளது. இலங்கை அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் விலைச்சூத்திரப் பொறிமுறை தங்களுக்கு ஒத்துவராமையாலேயே இந்தத் தீர்மானம் எடுத்துள்ளதாக அந்த நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி நைகர் ஸைமன்ஸ் தெரிவித்துள்ளார். கடந்த டிசெம்பர் 27.5 மில்லியன் டொலர் முதலீட்டில் இருபது வருட ஒப்பந்தத்துடன் யுனைற்றெட் பெற்றோலியம் இலங்கையில் கால்பதித்தது. இலங்கையில் எரிபொருள் விற்பனையை ஆரம்பித்த நான்காவது வெளிநாட்டு நிறுவனமாக யுனைற்றெட் பெற்றோலியம் கால்பதித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-41-6)




எந்தப் பக்கம் திரும்பினாலும் அடிமேல அடியா விழுந்துகொண்டிருக்குது 'லோச்சனா' எம்.பி.க்கு. அநுராதபுரத்தில கண்டபாட்டுக்கு வாகனம் ஓடி, பொலிஸ்காரரை டியூட்டி செய்யவிடாமல் குழப்பின குற்றத்துக்கு அவரை அரெஸ்ட் பண்ணிக்கொண்டு போன அண்டைக்கு இரவே ஆள் பிணையில வந்திட்டுது. லோச்சனா எம்.பி. முன்னால பொலிஸ் ஜீப்பில போக, பின்னால அவரின்ர தங்கத்தின் தங்கம் கலைச்சுக்கொண்டு காரில போனவா. அங்க 'நல்ல' லோயர்மாரைப் பிடிச்சதால லோச்சனா எம்.பி.க்கு உடன பிணை கிடைச்சது. இப்ப பிரச்சினை அதில்லை. 'இந்தக் கேஸ் விசயமா நாங்கள் ஆரிட்டையும் ஒருசதமும் வாங்கமாட்டம். அப்படிக் காசு உழைக்கவேணும் எண்ட தேவையும் எங்களுக்கு இல்லை' எண்டு தங்கத்தின் தங்கம் ஒரு வீடியோவில சொன்னவா. ஆனால் அந்த வீடியோ வந்த கொஞ்ச நேரத்தால வெளிநாட்டுக்கார லோச்சனா ரசிகர்மன்ற அன்ரிமார் ஒரு சூம் மீற்றிங் வைச்சவை. அதில' இந்தக் கேஸுக்கு லோயர் ஒரு லட்சம் ரூபா எதிர்பார்க்கிறா. அதையொருக்கா செட்டில் பண்ணிவிடுங்கோ' எண்டு லோச்சனா எம்.பி. கெஞ்ச, 'ஓம் டொக்டர், அதுக்கொண்டும் கவலைப்படாதையுங்கோ. காசெல்லாம் நாங்கள் வழமை மாதிரி அனுப்பி, செட்டில் பண்ணுவம்தானே' எண்டு அவை ஆறுதல் சொல்லுற வீடியோவும் பேஸ்புக்கில வந்தது.

'இப்ப கேள்வி என்னெண்டால், தங்கத்தின் தங்கம் தான் ஒரு நீதிதேவதை எண்டு லோச்சனா , புளுகித் திரியிறவர். அப்பிடி ஒரு தரமான லோயரை பக்கத்தில வைச்சுக்கொண்டு, எதுக்கு சிங்கள லோயரைப் பிடிச்சு பிணை எடுக்கவேணும்? அதுவும் இதொண்டும் பெரிய கேஸ் இல்லை. போக்குவரத்து விதியளை மீறின சாதாரண கேஸ். இதுக்கு எந்த லோயர் போனாலும் பிணை கிடைக்கும். அப்பிடி ஒரு சாதாரண வழக்கில கூட வாதாடமுடியாத ஆளோ உந்தத் தங்கத்தின் தங்கம்? இவையள் வெளிநாட்டு அன்ரிமாரிட்ட காசு கறக்கத்தான் இப்பிடி நாடகமாடுகினம்' எண்டு யூரியூப்காரர் கனபேர் போட்டுத்தாக்கத் தொடங்கிட்டினம். உடனேயே வழக்கம் போல எல்லாரையும் துரோகி லிஸ்ட்டில போட்டிட்டு 'படிக்காத தற்குறியள்' எண்டு லோச்சனா வீடியோவில சன்னதம் ஆடினவர்.

அதேவேகத்தோட ஆள் பார்லிமெண்டுக்குப் போய் தன்ர சிறப்புரிமையளை மீறுகினம் எண்டு இங்கிலிஷில எழுதிக்குடுத்து தமிழில கதைக்க வெளிக்கிட்டவர். ஆனால் இங்கிலிஷில எழுதிக்குடுத்தால் அதேமொழியிலதான் கதைக்கவும் வேணும் எண்டு சபாநாயகர் சொல்ல, லோச்சனா சூடாகிட்டார். இடம்,. பொருள், ஏவல் ஒண்டும் பாக்காமல் சபாநாயகரைப் பார்த்தும் ஆள் 'வள்ளெண்டு'கத்த, சிங்கள எம்.பி.மாரெல்லாம் ஆளை , பார்லிமெண்டுக்குள்ள வைச்சு செய்திட்டாங்கள். 'இவனையெல்லாம் பார்லிமெண்டுக்கு விட்டு எங்களை அவமானப்படுத்தவேண்டாம். இவனுக்குமூளை சரியில்லை. ஆளை அங்கோடைக்கு அனுப்பி செக் பண்ணவேணும்' எண்டெல்லாம் அந்த எம்.பி.க்கள் சன்னதம் ஆட, பெட்டிப்பாம்பு மாதிரி லோச்சனா பதுங்கிட்டார். இப்ப சபாநாயகரை சபையின்ர நடைமுறையை மீறிப் பேசின குற்றச்சாட்டு ஒண்டை இவரில வைக்கிறதுக்கு வேலையள் நடக்குதாம். அதைவிட, லோச்சனா எம்.பி. தன்ர வேலையை ராஜினமா பண்ணாமல் எலக்சன் கேட்ட வழக்கையும் கெதியா முடிக்கச் சொல்லி அரசாங்கம் ஓர்டர் போட்டிருக்கு எண்டும் கதை. அப்பிடி நடந்து பதவி பறிபோனால், தங்கத்தை எம்.பி.,யாக்கிப் போட்டு, லோச்சனா 'எப்பிடி வசதி?' எண்டபடி பைல் தூக்கித்திரியவேண்டியதுதான்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய

**மேடம்:** உற்சாகமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உற்சாகமாகக் காணப்படுவீர்கள். வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும். பணிச்சுமை குறைவதால் உற்சாகமாகக் காணப்படுவீர்கள்.

**இடபம்:** மகிழ்ச்சியான நாளாகும். புதிய முயற்சிகள் சற்று இழுபறியாகி முடியும். ஒரு சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தருவார்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், சுபச் செலவாக இருக்கும் என்பது ஆறுதல் தரும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. பணிகளில்கூடுதல்கவனம்தேவைப்படும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப் பிடிக்கவும். சலுகை கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**கன்னி:** முக்கியமான முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண்விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் தேவையை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு ஏற்படும்.

**மகரம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும். உறவினர்கள் வருகையால் திடீர்ச்செலவுகள் ஏற்படும். சிலருக்குக் குடும்பத்துடன் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். ஆதாயம் உண்டாகும். தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர் வீட்டு விசேஷத்தில் கலந்துகொள்வீர்கள்.



சாவகச்சேரிப் பொலிஸ் நிலை யத்தின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை மற்றும் அணிவகுப்பு நிகழ்வுகள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன.

இதன்போது அண்மையில் புதிதாகக் கடமைகளைப் பொறுப்பேற்ற யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயமகா கலந்துகொண்டு பரிசோதனைகளை முன்னெடுத்திருந்தார். (ச-25, 28)

## கசிப்புக் காய்ச்சியவர் விளக்கமறியலில்



யாழ்ப்பாணம், பெப். 7

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழிப் பிரதேசத்தில் கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் 42 வயதுடைய ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும், 2 லீற்றர் கோடாவும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபரை நேற்றுமுன்தினம் புதன்கிழமை நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-25, 28)

## கண்காட்சி நிகழ்வு

கொடிகாமம், பெப். 7

தென்மராட்சிக்கல்வி வலய விசேட கல்விப்பிரிவின் கண்காட்சி பாடசாலையின் அதிபர் க.ரமணன் தலைமையில் சாவகச்சேரி சக்தி அம்மன் தமிழ் க. பாடசாலையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய கல்வித்திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி இவ்வோன் லெரிவ்லியன், கௌரவ விருந்தினராக விசேட கல்வி மற்றும் ஆரம்பக் கல்வி ஆசிரியர் ஆலோசகர் ந.திருவாசகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41-159)

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டிகளின் ஓர் அங்கமாக வீதியோட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. ஆண்களுக்கான வீதி ஓட்டம் கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை முன்பாக இருந்தும் பெண்களுக்கான வீதி ஓட்டம் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு முன்பிருந்தும் ஆரம்பிக்கப்பட்டு டிறிபேர்க்கல்லூரி முன்பாக நிறைவு செய்யப்பட்டது. (ச-25, 28)

## மணல் கடத்தல் முறியடிப்பு

கிளிநொச்சி பெப். 7

கிளிநொச்சியிலிருந்து சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த மூன்று டிப்பர்களை சாவகச்சேரிப் பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மடக்கிப்பிடித்துள்ளனர்.

சங்குப்பிட்டிப் பாலம் பகுதியில் வீதிச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டபோதே இந்தக் குற்றச்செயல் முறியடிக்கப்பட்டது.

டிப்பர்களின் சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களை சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-25, 28)

## கடலுணவு விலை யாழில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ். குடாநாட்டில் கடலுணவுகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. கடலுணவுகளின் பிடிபாடு குறைந்து காணப்படுவதாலும் சந்தைக்கு அவை போதியளவு வந்து சேராமையாலும் பற்றாக்குறை நிலவுவதால் அவற்றின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றது.

குருநகர், பாசையூர், நாவாந்துறை போன்ற பிரதேசங்களில் இவ்வாறு விலை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இறால் கிலோ 2 ஆயிரம் ரூபாவுக்கும், நண்டு கிலோ ஆயிரத்து 500 ரூபாவுக்கும், பெரியமீன் கிலோ ஆயிரத்து 200 ரூபாவுக்கும், கணவாய் கிலோ ஆயிரத்து 800 ரூபாவுக்கும், திருக்கை கிலோ ஆயிரத்து 500 ரூபாவுக்கும்விற்கப்படுகின்றன. (எ-41-17)

## மரை இறைச்சியுடன் இருவர் கைது

முல்லைத்தீவு, பெப். 7

முல்லைத்தீவில் இருவேறு இடங்களில் மரை இறைச்சியுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முள்ளியவளைப் பகுதியில் 4 கிலோகிராம் மரை இறைச்சியுடன் ஒருவரும் மணலாறு பகுதியில் 2 கிலோ கிராம் இறைச்சியுடன் மற்றொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

எதிரிகளைத் தாக்க
கட்டப்படும் கோட்டைகளே கல்விச் சாலைகள்.

– கன்பூசியஸ்–

# கர்தினாலே கதைகேளும்!

இலங்கையில் புதிய அரசியலமைப்பொன்று அவசரமாக உருவாக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றார் கத்தோலிக்கத் திருச்சபையின் இலங்கைக்கான தலைவர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை. இலங்கையில் தற்போது வெற்றிடமும் - குறைபாடுகளும் உணரப்படும் விடயங்களில் அரசியலமைப்பும் பிரதானமானது. எனவே, அது திருத்தப்படவேண்டும் அல்லது முற்றாக மாற்றப்படவேண்டும் என்பதைப் பலரும் வலியுறுத்திவரும் பின்னணியிலேயே, புதிய அரசியலமைப்பின் உருவாக்கத்தையும் அதன் அவசியத்தையும் கர்தினால் சுட்டிக்காட்டியுள்ளார். தற்போதைய அரசியலமைப்பால், அதிகாரிகளுக்கு மிகையாக அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளன. இதனால், ஆட்சி வெறியும், அதிகார வெறியும் அரியணையில் இருப்போரிடம் ஏற்படுகின்றன. அத்துடன், இலகுவாகத் தீர்க்கப்படவேண்டிய இனப்பிரச்சினையை யுத்தமாக மாற்றி, ஒரு குருதிச் சகதி ஏற்படவும் இந்த அரசியலமைப்பே காரணமாக இருந்திருக்கின்றது என்பதையும் நாட்டின் சுதந்திரதினத்தன்று போட்டுடைத்திருக்கின்றார் கர்தினால். மிகக் கனதியானவையாகவும், முற்றுமுழுதாக வரவேற்கப்படவேண்டியவையாகவும்தான் அவருடைய கருத்துகள் அமைந்திருக்கின்றன.

ஒரு காலத்தில், ராஜபக்சக்களின் அரசியலைப் பலப்படுத்தும் கருவியாக கர்தினால் இருந்தார். தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைக்கும், தேவாலயங்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் கத்தோலிக்க அருட்தந்தையர்களின் படுகொலைகளுக்கும் ஒரு கத்தோலிக்கத் தலைவர் என்ற ரீதியிலேனும் நியாயம் கேட்க கர்தினால் முயலவில்லை. ஆனால், உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்களும், அந்தத் தாக்குதல்களால் ஏற்பட்ட வலியும் கர்தினாலுக்குள் ஏகப்பட்ட மாற்றங்களை விதைத்திருக்கின்றன. தாக்குதலின் பின்னணியை மட்டுமல்ல இலங்கையின் நீண்டகாலப் பிரச்சினைகளின் பின்னணியையும் கர்தினால் மிகச் சரியாகப் புரிந்துள்ளார். அவரின் அண்மைக்கால நடத்தைகள் அதையே மெய்ப்பிக்கின்றன.

எனினும், இறுதிப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும், கத்தோலிக்க தேவாலயங்களில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் தொடர்பிலும் கர்தினால் தனது கருத்துகளை வலுவாக வெளிப்படுத்தவேண்டும் என்பதைத்தான் தமிழ்க்கத்தோலிக்கர்கள் எதிர்பார்க்கின்றனர். கர்தினால் ஒன்றும் சிங்களத் தலைவர் அல்லர். அவர் தனிச்சிங்கள வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதியுமல்லர். இலங்கையில் வாழும் தமிழ்க்கத்தோலிக்கர்களுக்கும் அவர்தான் தலைவர். எனவே, நவாலி சென். பீற்றர் தேவாலயம், குருநகர் யாகப்பர் தேவாலயம் என வடக்கு - கிழக்கில் உள்ள நூற்றுக்கணக்கான தேவாலயங்களின் குருதிக் கதையை அவர் இனியாவது கேட்டறியவேண்டும்.

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதில் இருக்கும் அக்கறையை அவர் தமிழர் பகுதிகளில் உள்ள தேவாலயங்களில் இடம்பெற்ற படுகொலைகளிலும் காண்பிக்கும் போதுதான், அவர் ஒட்டுமொத்தத் தேசத்துக்குமான கத்தோலிக்கத் தலைவராக வரலாற்றில் பதிவாகுவார். பிரச்சினையையும், பின்னணியையும் அறிந்த பின்னர் காக்கப்படும் அமைதி, வரலாற்றுத் தவறுக்கு ஒப்பானது. அந்தத் தவறை கர்தினால் செய்யாதிருக்கட்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



# நெல் கட்டுப்பாடு விலை; நிர்ணயித்தது அரசாங்கம்



கொழும்பு, பெப். 7

**நெல்லுக்கான புதிய நிர்ணய விலையை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது.**

அதற்கமைய ஒரு கிலோக்கிராம் நாட்டு அரிசி நெல் 120 ரூபாவுக்கும் ஒரு கிலோக்கிராம் சம்பா நெல் 125 ரூபாவுக்கும் ஒரு கிலோக்கிராம் கீரி சம்பா நெல் 132 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார். நெற்சந்தைப்படுத்தல் அதிகாரசபையால் இந்த நிர்ணய விலையில் நெல் கொள்வனவு செய்யப்படும்.

நெல்லின் விலையை நிரண்யம் செய்யும்போது விவசாயிகளுக்கு ஒரு கிலோவுக்கு செலவாகும் விலையுள்ளது. இந்த விலையை விவசாயிகள் பூர்த்திசெய்யும் வகையிலும் இலாபத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையிலும் மூன்றில் ஒரு பங்கு சேர்த்து விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

கடந்தகாலங்களில் நிர்ணயவிலை தொடர்பில் விவசாய அமைப்புகள் விமர்சனங்களை முன்வைத்தன. எனினும் எவர் என்ன கூறினாலும் விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சரியான நேரத்திலேயே விலைகளை அறிவித்துள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# ஈ.பி.எப். அங்கத்தவர்கள் பதிவு செய்ய புதிய நடைமுறை

கொழும்பு, பெப்.7

ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் அங்கத்தவர்களைப் பதிவு செய்யும் புதிய நடைமுறை தொழில் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை தொழில் ஆணையாளர் நாயகம் எச்.கே.கே.ஏ.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அதன்படி 112 201 201 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்துவதன்மூலம் திகதியையும், நேரத்தையும் ஒதுக்கி கடினமின்றி சேவைகளைப் பெற்றுக் கொள்ளமுடியுமென என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-25,6)

# மன்னார் மருத்துவமனைக்கு இந்தியாவால் 600 மில்லியன்

மன்னார், பெப். 7

மன்னார் மருத்துவமனைக்கு 600 மில்லியன் ரூபாவை இந்திய அரசாங்கம் வழங்குவதற்கு முன்வந்துள்ளது. மருத்துவமனையில் விபத்து அவசர சிகிச்சைப்பிரிவை உருவாக்குவதற்கென இந்த நிதி கையளிக்கப்படவுள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ச-25, 6)

# நாமலுக்கு அழைப்பாணை

கிரிஷ் ஒப்பந்தம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவை எதிர்வரும் 18 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு உயர் நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்துள்ளது. ரக்பி விளையாட்டை ஊக்குவிப்பதற்காகக் கூறி, இந்திய நிறுவனமான கிரிஷிடமிருந்து 70 மில்லியன் ரூபாவை பெற்று முறைக்கேடாகப் பயன்படுத்தியதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ச-இ)

# பொதுச்சேவை நவீனமயம் மீளாய்வு செய்வதற்கு குழு

பொதுச்சேவை நடைமுறைகளில் காணப்படும் காலாவதியான நடைமுறைகளை மீளாய்வு செய்வதற்கென பொது நிர்வாக அமைச்சுச் செயலாளரின் கீழ் ஒரு குழுவை நியமிப்பதற்கு அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. பொதுச்சேவை நடைமுறைகளில் காணப்படும் சட்ட நடைமுறைகள் காலம் கடந்தவையும், பிரித்தானியர் காலத்துக்குரியவையுமாகும். இந்தச் சட்ட நடைமுறைகள் தற்போதைய நவீன போக்குவரத்து,தொடர்பாடல் விடயங்களுக்கு ஒவ்வாதவை. எனவே பொதுச்சேவை நடைமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான பரிந்துரைகளை மேற்கொள்வதற்கென ஒரு குழுவை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (ச-25,6)

நாளை
சனிக்கிழமை - தை - 26
08.01.2025
சுபநேரம் : 03.35 - 05.05
ராகுகாலம் : 09.33 - 11.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கராத்தே, சிலம்பம் போட்டிகள் வெற்றியாளர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.7

இந்தியாவின் மதுரையில் இடம்பற்ற சிலம்பம் மற்றும் கராத்தேப் போட்டிகளில் 36 முதலிடங்களைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலாளர் சுபாஜினி மதியழகன் தலைமையில் மானிப்பாய் அன்னை மரியாள் ஆலய முன்றலில் அண்மையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து சிவலீமன் சிலம்ப கழகம், பாபு இஷின் ரியூ கராத்தே பாடசாலை ஆகியவற்றின் மாணவர்கள் உள்ளடங்கிய 20 பேர் கொண்ட குழு மதுரையில் நடைபெற்ற சர்வதேச ரீதியிலான கராத்தே மற்றும் சிலம்பம் போட்டியில் பங்குபற்றியது.

போட்டியில் 36 முதல்நிலைப் பரிசுகளையும், 8 இரண்டாம் நிலைப் பரிசுகளையும், 5 மூன்றாம் நிலைப் பரிசுகளையும் பெற்றதோடு 95 கேடயங்களையும் அவர்கள் தம்வசமாக்கினர். (ச-25,27)




சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் சிறுவர் பெண்கள் அலகுகளில் கடமையாற்றும் அலுவலர்களுக்கான சட்ட ஆலோசணை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு, உதவிப் பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றது. (ச-25,9)



பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபையின் தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வும், பரிசளிப்பும் , நூல் வெளியீடும் பச்சிலைப் பள்ளிப் பிரதேசசபை தலைமை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் கலந்து கொண்டார். (ச-25,9)



சாவகச்சேரி வெற்றிலை வியாபாரி அமரர் இரத்தினம் நினைவாக அவரது குடும்பத்தினரால் கல்வயல் ஶ்ரீசண்முகானந்தா வித்தியாலய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ச-25,9)



நீதி அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டுப் பிரிவின் நிதியொதுக்கீட்டின் கீழ், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பத்தின் சுயதொழில் முயற்சிக்காக பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் தையல் இயந்திரம் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டது. (ச-25,9)

கொடிகாமம் சமுர்த்தி வங்கிப் பயனாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த 150 மாணவர்களின் கல்வித்தேவைக்காக சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் கொடிகாமம் சமுர்த்தி வங்கியினரால் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. (ச-25,9)



கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலய விசேட கல்வி அலகு மாணவர்களின் மாதிரி சந்தை அதிபர் தலைமையில் பாடசாலை வளாகத்தில் அண்மையில் இடம் பெற்றது. நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர். (25-159)







வவுனியா மருத்துவமனையின் குருதித் தேவையை முன்னிட்டு வவுனியா சமுதாயப் பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் வவுனியா மருத்துவமனையில் அண்மையில் இடம்பெற்றது. (ச-25)

# புலமைப்பரிசில் பரீட்சை கண்ணோட்ட ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், பெப்.7

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் புலமைப்பரிசில் பரீட்சை பற்றிய கண்ணோட்டமாக ஒன்றுகூடல் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் ஓய்வுபெற்ற ஆசிரியர் புஸ்பலதா மனோகரன் "தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஒரு பார்வை" என்ற பொருளில் உரையாற்றினார். கலாசாலைச் சமூகத்தின் சார்பில் சிரேஷ்ட விரிவுரையாளர் சிவலோசனி சுரேந்திரன் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து மதிப்பளிக்கப்பட்டார். (ச- 25)

வடமாகாணக் கல்வி அமைச்சின் அனுமதியுடன் பழைய மாணவச்சிப்பாய் அமைப்பினரால் நெடுந்தீவுப் பிரதேச மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சிப் பாசறையானது நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச- 25, 27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சி கிழக்கு யாழ். செம்பியன் பற்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தரம் 1 இல் இணைந்த மாணவர்களுக்கான கால்கோள் விழா கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது.
பாடசாலை அதிபர் கணேஸ்வரன் தலைமையில், இடம்பெற்ற நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர். பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-25,27)



மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் இணையும் மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சிக்கல்வி வலய அதிகாரிகள் கலந்துகொண்டு மாணவர்களுக்கு இலவசக் கற்றல் உபகரணங்களை வழங்கினர். (ச-25,9)



தென்மராட்சிக் கல்வி வலயத்தின் வலயமட்ட கால்கோள் விழா உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் அதிபர் க. உமாபாலன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச-22,25,159)

வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் தரம் ஒன்றில் புதிதாக இணைந்து கொண்ட மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா அதிபர் திருமதி ஞா. மோகன தாஸ் தலைமையில் பாடசாலை முன்றலில் இடம்பெற்றது. (ச-25,18)





கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயத்தில் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. (ச-25, 9)



பச்சிலைப்பள்ளி சமுர்த்தி வங்கியின் 2025 ஆம் ஆண்டுக்கான புதிய கட்டுப்பாட்டு சபைத்தெரிவும் நிறைவேற்றுக்குழுத்தெரிவும் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன்போது 2024 ஆம் ஆண்டு சிறப்பாகச் செயற்பட்ட பச்சிலைப்பள்ளி கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ச-25,9)




மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு அதிபர் க. இளங்கோவன் தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இவ்வோன் லெரிவ் லியன் பங்கேற்றார். (ச-22,159)

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் புதிதாகச் சேர்ந்த தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா கல்லூரி அதிபர் செ. பேரின்பநாதன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் கல்லூரியின் பழையமாணவர்களின் நிதிப்பங்களிப்பில் புதிதாக இணைந்துகொண்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், புத்தகப்பை, காலணிகள், சீருடை என்பன அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (ச-25, 28)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணுவிலிலுள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் நடந்த விபத்தில் உயிரிழந்த இளம் தொழிலதிபர் ஆ. சயந்தனின் முதலாவது ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு, இணுவில் இந்து விளையாட்டுக்கழக இளைஞர்களின் ஏற்பாட்டில், குருதிக்கொடை முகாம் இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ச-25, 66,23)



தென்மராட்சி மீசாலை வடக்கு கயல்விழி அறிவொளி முன்பள்ளி மாணவர்களின் கலைநிகழ்வும் கௌரவிப்பும் அண்மையில் முகாமைத்துவக் குழுத்தலைவர் க.சியந்தன் தலைமையில் முன்பள்ளி மைதானத்தில் இடம்பெற்றன. (ச-22,159)



யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தேசிய சுதந்திரதினத்தை முன்னிட்டு கடந்த செவ்வாய்க்கிழமை இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

இரத்ததான முகாம் நிகழ்வில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், விசேட அதிரடிப் படையினர் எனப் பலர் கலந்துகொண்டு குருதிக்கொடையளித்தனர். (ச-20,66)

முல்லைத்தீவு கள்ளப்பாடு தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற கிராம அலுவலர் சுப்பிரமணியம் கரிகாலன் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் நடனலிங்கம் சுஜீவன் ஆகியோருக்கான சேவைநலன் பாராட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ச-25, 246)





கல்விக்குக் கரம் கொடுப்போம் செயற்றிட்டத்தின் ஊடாக புலம்பெயர்வாழ் தமிழ்மக்கள், அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் ஸ்ருட்காட் நிதிப்பங்களிப்பில் மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டிக் கிராமத்தில் வசிக்கும் 11 மாணவர்களுக்கும், பருத்திப்பண்ணைக் கிராமத்தில் வசிக்கும் 17 மாணவர்களுக்கும், மன்னார் மாவட்டம் தீவுப்பிட்டிக் கிராமத்தில் வசிக்கும் 31 மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. (ச-41)





புத்தளம் சேனைக்குடியிருப்பு, மணல் குன்று, அபயபுர, அரலியபுயனப் பகுதிகளில் வாழும் பல்லின சமூகங்களைச் சேர்ந்த 80 குடும்பங்களுக்கு இரண்டு லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உலர் உணவுப்பொருள்கள் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் சேனைக்குடியிருப்பு பத்தினியம்மன் ஆலயத்தின் சமூகசேவையாளர் எஸ்.மகேந்திரன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன. (எ-41-66)

யாழ். மாவட்ட குடிசார் அமைப்புகளின் பொதுக்கூட்டமும் திறன் விருத்திப் பயிற்சிப்பட்டறையும் தலைவர் திருமதி ம.தமிழ்ச்செல்வி தலைமையில் தனியார் விருந்தினர் விடுதியில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் கிறிசலிஸ் நிறுவனத்தின் திட்டப் பிராந்திய முகாமையாளர் ம.பிரபாகரன் மற்றும் சிரேஷ்ட திட்ட இணைப்பாளர் டி.பிரகாஸ் வளவாளர் த.சதீசன், கிறிசலிஸ் நிறுவனத்தின் பால்நிலை மற்றும் கண்காணிப்புக்கும் மதிப்பீட்டுக்குமான ஆலோசகர், யாழ் மாவட்ட குடிசார் அமைப்புகளின் ஒன்றியத்தின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ச-22, 159)



'வடலி அம்மன்' என அழைக்கப்படும் சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து பத்துத் தினங்கள் மஹோற்சவம் நடைபெறவுள்ளது. (எ-22,66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட ஆட்சியைப் பேணாத சட்டமா அதிபர் பதவி விலகுக

யாழ்.ஊடக அமையம் காட்டம்

யாழ்ப்பாணம், பெப்.7

**இலங்கைத்தீவு முழுவதும் கடந்த காலங்களில் கட்டவிழ்த்துவிடப்பட்ட ஊடகப் படுகொலைகள் மற்றும் தாக்குதல் சூத்திரதாரிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படாத சட்டஆட்சியே இந்நாள்வரை பேணப்பட்டுவருகின்றது. தற்போது லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பான சந்தேகநபர்கள் விடுதலை செய்யப்படலாம் என்று அறிக்கை விடுத்துள்ள சட்டமா அதிபர் பதவி விலகவேண்டும் என்று யாழ்.ஊடக மையம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: கடந்த நெருக்கடிமிக்க காலப்பகுதிகளில் வடக்கு-கிழக்கு உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் கொல்லப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பிலான அனைத்து வழக்குகளும் முன்னைய காலங்களில் சட்டமா அதிபர்களது ஆலோசனைகளின் பிரகாரம் அவ்வவ் மாவட்ட நீதிமன்றங்களில் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

ஊடகவியலாளர் மாமனிதர் தராகி சிவராம் முதல் மயில்வாகனம் நிமலராஜன் வரையாக கொலைகளை அரங்கேற்றிய கொலைகாரர்கள் சர்வசாதாரணமாக நாட்டைவிட்டு வெளியேறவும் திரும்பிவரவும் ஏற்றதொரு சட்டஆட்சியே இந்நாள்வரை பேணப்பட்டுவருகின்றது.

தற்போது ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை விவகாரத்தில் சாட்சியங்களை அழித்தமை மாற்றியமை தொடர்பில் கைதுசெய்யப்பட்டு கடந்த ஐந்து மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட சந்தேகநபர்களை முற்றாக வழக்கிலிருந்து விடுவிக்க சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இத்தகைய அறிக்கையை விடுத்த சட்டமா அதிபர் பதவி விலகவேண்டும், லசந்த விக்கிரமதுங்க படுகொலை சந்தேகநபர்களை விடுதலைசெய்வதன் பின்னால் உள்ள காரணங்களை பகிரங்கப்படுத்த வேண்டும் -என்றுள்ளது. (ச-125)

# சர்வதேச சதுரங்கப்போட்டிக்கு யாழ்.கொக்குவில் இந்து மாணவர்கள் இருவர் தகுதி

யாழ்ப்பாணம், பெப்.7

யாழ்.கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலையின் மாணவர்களான வேணுகானன் நயனகேஷன், தனுசன் சாகித்தியன் ஆகியோர் எதிர்வரும் மார்ச் மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை சேர்பியா நாட்டில் நடைபெறவுள்ள உலகப் பாடசாலைகள் சதுரங்கப் போட்டியில் பங்கேற்கத் தகுதிபெற்றுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற தேசிய தெரிவுப்போட்டியில் 10 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 6 சுற்றுகளில் விளையாடி நயனகேஷன் 5 புள்ளிகளைப் பெற்று சம்பியன் பட்டத்தைத் தன்வசப்படுத்தினார். சாகித்தியன் 4.5 புள்ளிகளுடன் 3 ஆம் இடம் பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-41-66)



# சுவிட்ஸர்லாந்தில் ஈழத்தமிழருக்கு 'சமூகசேவை விருது'

யாழ்ப்பாணம், பெப். 7

சுவிட்ஸர்லாந்து நகராட்சி அலுவலகத்தினால் ஈழத்தமிழர் ஒருவருக்கு 'சமூகசேவை விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த சிவசுந்தரம் கிருஷ்ணபிள்ளை என்பவருக்கே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

சுவிற்ஸர்லாந்தில் கடந்த 35 ஆண்டுகளாக சுவிற்ஸர்லாந்து சமூக விவகாரத்துறையில் குடிமக்களுக்காக ஆற்றிய சேவைகளுக்காக அவருக்கு இந்த விருது கையளிக்கப்பட்டுள்ளது. (ச-25,125)

# இராணுவ ஆக்கிரமிப்பில் பாடசாலை மைதானத்துக்கான வீதி; ம.உரிமை ஆணைக்குழு தலையீடு

கிளிநொச்சி, பெப். 7

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்துக்குச் செல்லும் பாதையை இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்துள்ளமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம் விளக்கம் கோரி கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியை அடிப்படையாகக் கொண்டு இலங்கை இராணுவத் தளபதிக்கும், பாதுகாப்பு அமைப்பின் செயலாளருக்கும் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்கள் 50 மீற்றர் தூரத்திலுள்ள தங்களுடைய பாடசாலை மைதானத்துக்கு தினமும் ஒரு கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்றுவருகின்றனர்.

இதுவொரு ஆபத்தான பயணமாகக் காணப்படுகிறது. இது தொடர்பில் இராணுவம் எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன் தங்களுடைய நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. குறித்த கடிதத்தின் பிரதிகள் கல்வி அமைச்சின் செயலாளர், கொழும்பு, வடக்கு மாகாண ஆளுநர், கிளிநொச்சிப் படைகளின் கட்டளை அதிகாரி ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச-214)

# 35 லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைது

முல்லைத்தீவு, பெப்.7

முல்லைத்தீவு மயில்குளம் பகுதியில் சட்டவிரோதமாக கசிப்புக் காய்ச்சிய இளைஞர் ஒருவர் முல்லைத்தீவுப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 35 லீற்றர் கோடா கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபரை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)

# கலைத்தூது கல்லூரியின் 14 ஆவது பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், பெப்.7

திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் 14 ஆவது பரிசளிப்பு நிகழ்வு கல்லூரியின் அதிபர் திருமதி மேரி அஞ்சலா அல்போன்சஸ் தலைமையில் கலைத்தூது கலையகத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி சி.ரகுராம், சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய நடனப் பாட ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ச-41)



# கழிவுகளை உணவாக்கும் கால்நடைகள்

யாழ்ப்பாணம், பெப்.7

யாழ். முற்றவெளியில் இடம்பெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் நடைபாதை வியாபாரத்தின்போது பயன்படுத்தப்பட்ட பொலித்தீன் மற்றும் கழிவுகள் அகற்றப்படாத நிலையில் தேங்கிக் கிடப்பதால் அவற்றைக் கால்நடைகள் உட்கொள்வதை அவதானிக்கமுடிகின்றது. அந்தக் கழிவுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-41-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறிய மக்களின் பொருளாதாரத்தை அபகரிக்கின்றது யாழ். மாநகரசபை

## பழக்கடை வியாபாரிகள் போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ். மத்திய பேருந்து நிலைய வளாகத்தின் பின்புறமாக வைரவர் கோயில் வீதியில் உள்ள பழக்கடை வியாபாரிகள், யாழ்ப்பாணம் மாநகர சபை தமது வாழ்வாதாரத்தை அழிக்கின்றது என்று வலியுறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

வியாபாரிகளாகிய நாம் அன்று அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்திருந்த கோரிக்கைக்கு அமைவாக, ஈ.பி.டி.பி.யின் ஆட்சி அதிகார வரையறைக்குள் யாழ் மாநகர சபை இருந்தபோது இந்தக் கடைகள் எமக்கு வழங்கப்பட்டன.

இதற்காக நாம் யாழ். மாநகரசபைக்கு ஆரம்பதில் 3 ஆயிரம் ரூபாவும் தற்போது 7 ஆயிரத்து 500 ரூபாவும் வரியாகச் செலுத்தி வருகின்றோம். இந்த நிலையில் தற்போதும் மேலும் 300 ரூபா வரி உயர்வு என கூறுகின்றனர் அதையும் நாம் ஏற்றுக்கொள்கின்றோம். கடைகளின் முகப்பு போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதாக அதிகாரிகள் எம்மிடம் தெரிவித்ததற்கு இணங்க அதையும் சில அடிகள் உள்ளே எடுப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளோம்.

இவ்வாறிருக்கையில் எமது வர்த்தக நிலையத்தை மேலும் சிறியதாக்கும் நடவடிக்கையில் தற்போது அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். இதற்கான அளவீட்டுப் பணிகள் எமது எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளன. கேட்டால் தூய இலங்கை வேலைத்திட்டம் என்கின்றனர். எமது வாழ்வாதாரத்தை அழிப்பதா தூய இலங்கை வேலைத்திட்டம் என்று நாம் கேட்க விரும்புகின்றோம் - என்றனர். (ம-20-125-27)

# யாழ். தேவி நேர விவரம்

யாழ்.தேவி ரயில் சேவையானது யாழ்ப்பாணத்தில் இருந்தும், கொழும்பில் இருந்தும் தினமும் காலைச் சேவையாக இடம்பெற்று வருகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, காலை 5:45 மணியளவில் கொழும்பு கோட்டையிலிருந்து சேவையை ஆரம்பித்து யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை மதியம் 1:20 மணியளவில் வந்தடைந்து, 1.45 மணியளவில் காங்கேசன்துறை ரயில் நிலையத்தைச் சென்றடையும்.

அதுபோல், காங்கேசன்துறையிலிருந்து காலை 10:30 மணியளவில் சேவையை ஆரம்பித்து யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை காலை 11 மணியளவில் அடைந்து, தொடர்ந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை இரவு 7 மணியளவில் சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-125)

# கச்சதீவு திருவிழாவுக்கு இன்று முன்னாயத்தம்!

யாழ்ப்பாணம், பெப். 7

கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா இவ்வருடம் மார்ச் மாதம் 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள நிலையில், இதற்கு முன்னாயத்தக் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இன்று காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-125)

# குளிருக்கு மூட்டிய தீ பற்றியது உடையில்!

## யுவதி பரிதாபச் சாவு

மன்னார், பெப். 7

குளிருக்கு மூட்டிய தீ, உடையில் பற்றிப்பிடித்ததில் இளம் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

மன்னார் மடுப் பகுதியைச் சேர்ந்த மேரி எமில்டா (வயது - 27) என்ற யுவதியே உயிரிழந்தவராவார்.

ஜனவரி மாதம் 12ஆம் திகதி குளிர் காய்வதற்காக அவர் தீ மூட்டியபோது, அவரின் ஆடையிலும் தீப்பற்றியுள்ளது. இதன்போது படுகாயங்களுக்கு உள்ளான அந்த யுவதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். எனினும், சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

# பரிசில் நாள் நிகழ்வு

கொடிகாமம், பெப் 7

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வு, அதிபர் சி.சிவநாவலன் தலைமையில் பாடசாலையின் ஆருத்ரா அரங்கில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி க.சிவலோஜினி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (25-159)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## பிரதேசசபை கடைகள் வாடகைக்கு வழங்குதல் தொடர்பான 2வது மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட மருதனார்மடம் சந்தைப்பகுதியில் உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்ட நிதியில் (LDSP) அமைக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடையினை 01.03.2025ம் திகதி முதல் வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக்கூடிய ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

.கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 07.02.2025 - 20.02.2025 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 21.02.2025 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 21.02.2025 வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்

| விபரம் | பரப்பளவு (சதுரஅடி) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஒருங்கிணைந்த கட்டுப்பணம்) | மாத வாடகை | கேள்விப் பத்திர கட்டணம் | கேள்வி வைப்பு மீளளிக்கக் கூடியது |
|---|---|---|---|---|---|
| மேற்தளம் | | | | | |
| கடை இல - 07 | 308 | 2,040,000.00 | 8,500.00 | 2,000.00 | 41,000.00 |

**நிபந்தனைகள்:-**

1. விண்ணப்பதாரி வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கிராம சேவகரால் உறுதிப்படுத்திய கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்க வேண்டும்.
3. கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்வோர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி தமது கேள்விகளை தனித்தனி கடித உறையில் இட்டு "செயலாளர் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு மூலப்பிரதி, இணைப்பிரதி எனக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்.
4. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும். குறித்த மாத வாடகை பணத்தினை ஒவ்வொரு மாதம் 31ம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதக்கட்டணத்தின் 10 வீதம் தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.
5. கேள்விச்சித்திகரராக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் 28.02.2025ம் திகதிக்கு முன்னர் ஒருங்கிணைந்த கட்டுப்பணம் முழுத்தொகையையும் ஒரேதடவையில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரு வாரத்திற்குள் பிரதேசசபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினை பெற்று வியாபாரம் / தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
6. சித்தி பெறும் கேள்விதாரர் சந்தையில் விற்பனை செய்யப்படும் பொருட்களையோ அல்லது பிரதேசசபையால் அங்கீகரிக்கப்படாத பொருட்கள் மற்றும் மதுபானவகைகளோ, போதை வஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்தபொருள்களையோ விற்பனை செய்வது தடை செய்யப்படுவதுடன், கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
7. சித்திகர கேள்விதாரர் வலிகாமம் தெற்கு பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
8. சித்திகர கேள்விதாரர் பாதுகாப்பு வைப்பு பணமாக 03 மாத வாடகை தொகையினை முற்பணமாக செலுத்த வேண்டும்.
9. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிம சான்றிதழையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
10. கேள்விப்பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி சா.உருத்திரசம்பவன்
செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

07.02.2025

(CS/56194) J-1

# பெயர் மாற்றம்

அல்லியவத்தை கோப்பாய் மத்தியில் வசிக்கும் செல்வரஞ்சன் திஷாந்தன் ஆகிய நான் எனது பெயரை செல்வரஞ்சன் நிஷாந்தன் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் செல்வரஞ்சன் நிஷாந்தன் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

**செல்வரஞ்சன் நிஷாந்தன்**

(CS/57435) J-1

# இரத்தினம்மா கனகசபை

## ஞாபகார்த்த அறக்கட்டளை

எமது அறக்கட்டளையின் ஏற்பாட்டில் கோண்டாவில் நிலையத்தில் இலவச கண் பரிசோதனை முகாம் நடாத்தவுள்ளோம்.

திகதி : 09.02.2025 ஞாயிறு , 8.30 am

இடம் : 90/5 ஸ்டேசன் வீதி, கோண்டாவில் மேற்கு.
(கோண்டாவில் இந்துக் கல்லூரிக்கு அருகில்)

**பங்குபற்றக்கூடியவர்கள் 55 வயதுக்கு மேற்பட்டவர்கள்.**

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இந்த முகாமில் பங்குபற்றித் தங்களது கண் சம்பந்தமான வைத்திய ஆலோசனைகளையும் இலவச மூக்குக் கண்ணாடிகளையும் (தேவையுடையவர்களுக்கு மட்டும்) பெற்றுப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அவசியம் அடையாள அட்டை, குடும்ப அட்டை மற்றும் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்துடன் வரவும்.


**பதிவுகளுக்கு :- 077 258 6022**

(CS/57438) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## பிரான்சிஸ்பிள்ளை யேசுதாசன்



யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ்பிள்ளை யேசுதாசன் (குயின்ரன் மோட்டோஸ் உரிமையாளர்) அவர்கள் நேற்று (06.02.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரான்சிஸ்பிள்ளை-ரோசம்மா தம்பதியரின் அன்பு மகனும் தோமஸ்ராஜரட்ணம், சூசைப்பிள்ளை, திரேசம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும். காலஞ்சென்றவர்களான மெக்டலின், டெய்சி, நிக்கிலாப்பிள்ளை. அரியரட்ணம் மற்றும் சீமாப்பிள்ளை (Australia) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காலஞ்சென்ற வசந்தபுஷ்பராணி அவர்களின் பாசமிகு கணவரும் உஷாந்தினி, கறோல் குயின்ரஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரவின், யேசுதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (07.02.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் ஆனைப்பந்தியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்கலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிறப்பு 24.01.1946 — இறப்பு 06.02.2025

**பிரிவால் துயருறும்**
**பிள்ளைகள்**
**077 218 1701**

---

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 09.12.1944

இறப்பு 07.02.2020

அமரர்

### கதிர்காமக்குருக்கள் மாணிக்கவாசகர்

அப்பா நீங்கள் எம்மை விட்டுப்
பிரிந்து ஆண்டுகள் ஐந்து
கடந்தாலும் உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலாது


காரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

பாசமுடன்
குடும்பத்தினர்

(CR/44271)J-1

---

## 31ம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 10.01.2025 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

### அமரர் குமரேசு யோகலிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.02.2025) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெற்று வீட்டுக் கிருத்தியக்கிரியைகள் நாளைமறுதினம் (09.02.2025) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கிளிநொச்சி. கணேசபுரத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணேசபுரம், கிளிநொச்சி.

**குடும்பத்தினர்.**
077 882 0908, 077 816 4778
0049 1764 1197110

(CR 44270) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவட்ட பொது வைத்தியசாலை - வவுனியா
## பெறுகை அறிவித்தல்
### மீள்பாவனை பொருட்கள் விற்பனை செய்தல் - 2025/ 2026

வவுனியா பொது வைத்தியசாலையின் 2025/ 2026 ஆம் ஆண்டிற்குரிய கீழ்வரும் மீள்பாவனை பொருட்கள் விற்பனை செய்வதற்கான முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| மீள்பாவனப் பொருட்கள் கேள்வி இல:- NP/04/43/DGHV/03/NCB/SALE/2025/01 | | | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை | கேள்வி பிணை |
|---|---|---|---|---|
| இல | விபரம் | ஆண்டுக்கான விற்பனை விபரம் | 2,000.00 | Rs.15,000.00 , 22.05.2025 |
| 1 | வெற்றுக் காகித மட்டை | 5,000 Kg | | |
| 2 | வெற்றுக் கலன் 5 L | 5,000 | | |
| 3 | வெற்றுக் கலன் 10 L | 4,750 | | |
| 4 | வெற்றுக் கலன் 35 L | 300 | | |
| 5 | வெற்றுக் கலன் 50 L | 150 | | |
| 6 | சிரட்டை | 5,000 Kg | | |


1. பெறுகை ஆவணங்களை 07.02.2025 தொடக்கம் 20.02.2025ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணி தொடக்கம் மாலை 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விற்பனை பொருட்களை மேற்குறிப்பிட்ட நேரத்தில் பார்வையிட முடியும்
2. பெறுகைப்பத்திரம் கோரும் நிறுவனங்கள் குறித்த பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு வியாபார பெயர்ப்பதிவினை கொண்டிருத்தல் வேண்டும்.
3. அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து 22.05.2025 வரை செல்லுபடியாகக்கூடிய ரூபா 15.000.00 பெறுமதியான பிணைமுறி அல்லது இதற்கு சமமான தொகையை எமது வைத்தியசாலையில் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டினை கேள்வி ஆவணத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.
4. பிரதியுடன் கூடிய சகல பெறுகை ஆவணங்களும் **"தலைவர். பிராந்திய பெறுகைக் குழு. மாவட்ட பொது வைத்தியசாலை. கண்டி வீதி. வவுனியா"** என்ற முகவரிக்கு அனுப்பப்படுவதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"2025/ 2026 ஆம் ஆண்டிற்கான மீள்பாவனைப் பொருட்கள் விற்பனை செய்தல்"** என குறிப்பிடப்படல் வேண்டும்.
5. சகல முத்திரையிடப்பட்ட பெறுகைகளும் 21.02.2025ம் திகதி மாலை 2.30 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவேண்டும். பெறுகை நேரம் முடிவடைந்தவுடன் அன்று மாலை 2.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரம் விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
6. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 024-2228094 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு அறிந்துகொள்ளலாம். மேலும் பெறுகை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதியாகும்.

**Dr. N.C.D.ஆரியரத்ன.**
**தலைவர். பிராந்திய பெறுகைக்குழு.**
**மாவட்ட பொது வைத்தியசாலை. வவுனியா.**
**024-2228094, Fax: 024-2222262. Email: acctghv@gmail.com**

(CR/44268) J-1

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு
16 . 02 . 1948



உதிர்வு
13 . 01 . 2025

**கடந்த 13.01.2025 திங்கட் கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்**

## அமரர் பொன்னையா சிவராசரத்தினம் (சிவம்)

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் நாளை (08.02.2025) சனிக்கிழமை காலை 7:00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எதிர்வரும் (12.02.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்**

**பெரியவிளான்,**
**இளவாலை.**

**குடும்பத்தினர்**
[illegible]

(CS/57423) J-1

### லசந்தவுக்கு...

யுள்ளனர். 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க இனந்தெரி யாத நபர்களால் சுட்டுப் படுகொலை செய்யப் பட்டார். இந்த கொலை வழக்குடன் தொடர்பு டைய மூன்று சந்தேகநபர்களை விடுதலை செய்வதற்கு சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க பரிந்துரை செய்துள்ளதைத் தொடர்ந்தே, அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து பலநூறு ஊடகவியலாளர்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். கொழும்பு - உயர்நீதிமன்ற வாயிலில் இந்த ஆர்ப்பாட் டம் இடம்பெற்றது. ஆர்ப்பாட்டத்தை முன் னிட்டு பலத்த பொலிஸ் பாதுகாப்புப் போடப் பட்டது. பொதுமக்களும் பெருமளவில் ஆர்ப் பாட்டத்தில் கலந்துகொண்டனர். (அ-ம-இ)

# பொது அறிவித்தல்

வலிகாமம் வடக்கு J/241 வறுத்தலைவிளான் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள வல்லை தெல்லிப்பளை அராலி வீதியில் ஆரம்பித்து மாவிட்டபுரம் மயிலிட்டி வீதியில் முடிவடையும் சபையின் பதிவேடுகளில் வறுத்தலைவிளான் பிள்ளையார் கோவில் வீதியென பதிவுசெய்யப்பட்ட வீதியின் பெயரை "வித்துவ சிரோமணி பிரமஸ்ரீ சி.கணேசையர் வீதி" எனப்பெயர்மாற்றம் செய்யப் பொதுமக்கள் கோரிக்கை சமர்ப்பித்துள்ளனர். இவ்வீதி பெயர்மாற்றம் செய்வது தொடர்பில் ஆட்சேபனைகளேதுமிருப்பின் எதிர்வரும் 2025.02.21ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தபாலிலோ அல்லது நேரடியாகவோ செயலாளர். வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை. கொல்லங்கலட்டி என் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அ.சுதர்ஜன்.
செயலாளர்.
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை.

2025.02.07

(CS/57432) J-1

## வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
### இல - 44, குட்செட்வீதி , வவுனியா

### அறிவித்தல்
### பகிரங்க ஏல விற்பனை

வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு சொந்தமான கீழ்குறிப்பிடப்படும் மோட்டார் சைக்கிள் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது.

மோட்டார் சைக்கிள் இலக்கம் : NP BFH - 1544
வகை : HONDA CB 125 SHINE
ஆரம்ப கேள்வித் தொகை : 300,000.00

மேற்குறிப்பிடப்பட்ட மோட்டார் சைக்கிள் 22.02.2025 ந் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கீழ்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அமைந்துள்ள சமாச அலுவலக மண்டபத்தில் சமாச நிதி, நிர்வாக உபகுழுவின் முன்னிலையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும். கூடுதலான கேள்வித்தொகையை கேட்கும் நபருக்கு மோட்டார் சைக்கிள் விற்பனை செய்யப்படும் என்பதுடன் சமாச நிதி, நிர்வாக உபகுழுவின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

இப் பகிரங்க ஏலவிற்பனையில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் மீளளிக்க முடியாத நுழைவுக் கட்டணமாக ரூபா ஐந்நூறு (500.00) தொகையையும், மீளளிக்கக் கூடிய தொகையான ரூபா ஆயிரம் (1,000.00) தொகையையும் கீழ்குறிப்பிடப்படும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சிட்டையை ஏலவிற்பனை திகதிக்கு முன்பாக பெற்றுக் கொள்ள வேண்டும். மொத்தமாக ரூபா 1,500.00 தொகையை செலுத்தி பற்றுச்சிட்டையை பெற்றுக் கொண்டவர்கள் மட்டும் பற்றுச்சிட்டையுடன் பகிரங்க ஏலத்தில் கலந்து கொள்ளமுடியும்.

மேற்கூறிய மோட்டார் சைக்கிளை கீழ்குறிப்பிடப்படும் முகவரியில் அமைந்துள்ள சமாச அலுவலகத்தில் 11.02.2025 ந் திகதி தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விடப்படும் தினம் காலை 10.00 மணி வரை பார்வையிடலாம்.

மோட்டார் சைக்கிளின் கேள்வித் தொகையின் பெறுமதியை அன்றைய தினமே முழுமையாக செலுத்தி மோட்டார் சைக்கிளை பெற்றுக் கொள்ள வேண்டும். அல்லது கேள்வித் தொகையின் பெறுமதியின் அரைப்பங்கிற்கு (50%) குறையாத தொகையினை அன்றைய தினம் செலுத்தி மிகுதித் தொகையை ஏல விற்பனைக்கு விடப்படும் தினத்தில் இருந்து ஆகக்குறைந்தது மூன்று (03) நாட்களுக்குள் செலுத்தி முடிக்க வேண்டும். முழுத்தொகையையும் செலுத்தி முடித்த பின்பே மோட்டார் சைக்கிளை பெற்றுக்கொள்ளலாம்.

கூடுதலான கேள்வித் தொகையில் மோட்டார் சைக்கிளை பெற்றுக்கொள்ளும் நபர் அன்றைய தினம் மோட்டார் சைக்கிளின் பெறுமதியில் அரைப்பங்கிற்கு குறையாத தொகையை செலுத்திய பின்பு மூன்று நாட்களுக்குள் மீதித்தொகையை செலுத்தி மோட்டார் சைக்கிளை பெற்றுக்கொள்ளாத பட்சத்தில் செலுத்திய தொகை உரிய நபருக்கு மீளளிக்கப்படமாட்டாது என்பதுடன் அடுத்த கேள்வித் தொகையில் உள்ள நபருக்கு மோட்டார் சைக்கிள் விற்பனை செய்யப்படும்.

மோட்டார் சைக்கிளை பெற்றுக்கொண்ட நபர் அதன் பின்பு மோட்டார் சைக்கிள் தொடர்பாக அவரினால் தெரிவிக்கப்படும் எவ்விதமான குறை நிறைகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மோட்டார் சைக்கிளை பெற்றுக்கொண்ட நபருக்கு மோட்டார் சைக்கிளின் பதிவுச் சான்றிதழ், வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் ஆகியவற்றின் மூலப்பிரதிகளுடன் உரிமை மாற்றம் தொடர்பான படிவமும் ஒப்பமிடப்பட்டு வழங்கப்படும்.

**திரு.சு.புவனேந்திரராசா JP**
**தலைவர்**
**வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.**
**இல.44, பொதி மண்டப வீதி. (Goods shed Road) வவுனியா.**
**T.P - 024-2222636 , 024-2222341**

**திகதி : 07.02.2025**

(CS/29078) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
15.04.1966

மறைவு
06.02.2025



## அமரர் முருகேசு பேரின்பநாதன்

வளுப்போடை களபூமி காரைநகரை பிறப்பிடமாகவும் கல்லூரி வீதி கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு பேரின்பநாதன் அவர்கள் நேற்று (06.02.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-தங்கம்மா தம்பதியின் அன்பு மகனும், நவரட்ணம் (ஓய்வு நிலை தபால் உத்தியோகத்தர்) காலஞ்சென்ற நேசமலர் தம்பதியின் அன்பு மருமகனும் பத்மலதாவின் அன்புக்கணவரும், சனுசன் (Cargills Bank), கிரிசன் (ICBT Campus) அவர்களின் அன்புத் தந்தையும், நிரோஜினி (Jaffna Teaching Hospital) அவர்களின் அன்பு மாமனாரும் பரராசசிங்கம் காலஞ்சென்றவர்களான பஞ்சலிங்கம், தம்பிஐயா மற்றும் பரமானந்தம், திருமதி தங்கராசா ஈஸ்வரி, திருமதி சிவராசா அன்னலட்சுமி (அன்னம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் களபூமி தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கல்லூரி வீதி,
கொக்குவில்.

தகவல்:
**குடும்பத்தினர்**
சனுசன் (மகன்) - 075 508 8706
கிரிஷன் (மகன்) - 075 230 1217

(CS 57437) V-1

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 08.01.2025 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த
எங்கள் குடும்பத்தலைவர் பாசமிகு கணவர்

## அமரர் அல்பிரட் நவரத்தினம் சின்னத்துரை

அவர்கள் எம்மை விட்டு நினையாப்பிரகாரம் பிரிந்த வேளை எமது இல்லம் வந்து எமக்கு பற்பல உதவிகள் புரிந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் எம்முடன் துயர் பகிர்ந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், கா/பெற்றோலியம் கூட்டுத்தாபனம், Nuffield பாடசாலை, வவுனியா தபாலகம், திருமறைக் கலாமன்றம் சார் அனைவருக்கும் இணையத்தளம், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள் மலர்வளையங்கள், பதாகைகள் மூலம் தம் இரங்கலை தெரிவித்தவர்களுக்கும் மேலும் அன்னாரின் ஆத்மசாந்திக்காக எமது இல்லம் வந்து செபித்த அருட்தந்தையர், அருட்சகோதரிகளுக்கும் இறுதி அடக்க வழிபாட்டை மேற்கொண்ட யாழ். நகர், நவாலி சிற்றி மிஸன் அருட்பணியாளர்கள் அனைவருக்கும் மற்றும் நன்றி கூற தவறியவர்களுக்கும் எம் குடும்பம் சார்பில் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

63, மருதடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

நன்றி

மனைவி P.F.சின்னத்துரை
**குடும்பத்தினர்.**

(CR 44270) V-1

# மரண அறிவித்தல்



## இராசேந்திரம் சாந்தகுமாரி

(ஓய்வு நிலை உப அதிபர் - யா/பெரிய புலம் மகாவித்தியாலயம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி வடக்கை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட இராசேந்திரம் சாந்தகுமாரி அவர்கள் நேற்று (06.02.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - பராசக்தி தம்பதியரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராசையா - நவமணி தம்பதியரின் அன்பு மருமகளும், இராசேந்திரம் அவர்களின் அன்பு மனைவியும், விதுஷா அவர்களின் பாசமிகு தாயாரும், ஜனகராஜ் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கமநல அபிவிருத்தி திணைக்களம் - யாழ்ப்பாணம்)அவர்களின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்ற வசந்தகுமாரி (UK) மற்றும் சந்திரகுமாரி (Germany) சிவகுமார் (France), காலஞ்சென்ற சத்தியகுமாரி மற்றும் விஜயகுமாரி (France), உத்தமகுமாரி (Australia), செல்வகுமார் (Canada) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற இராசகுமாரன் மற்றும் மகேஸ்வரன், யோகேஸ்வரி, மதுரநாயகம், ஸ்ரீகாந்தன், வசந்தராசன், இராசதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2025) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

தோற்றம்
18.12.1951

மறைவு
06.02.2025

பனிக்கர் லேன்,
திருநெல்வேலி.

076 664 2663 - (மருமகன்)
077 184 4268 - (மகள்)

(CS/57434) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திஸ்ஸ...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பிரிவினைகளை ஏற்படுத்தும் இனவாத நடவடிக்கைகளிலேயே இராணுவம் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறது என்று தொடர்ச்சியாக நான் சொல்லிவருகிறேன். தமிழ் மக்களுக்கு எதிராக அவர்கள் ஒரு போரை நடத்தியதோடு, அவர்கள் அந்த மனநிலையில் இருந்து வெளியே வரவில்லை. தமிழ் நலன்களுக்கு எதிரான மற்றும் தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு நிறுவனமாகவே இராணுவம் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது என்பதை பொறுப்புடன் கூறுகிறேன்.
தையிட்டியில் சட்டவிரோத திஸ்ஸ விகாரையை கட்டுவதில் இராணுவத்தினர் எவ்வாறு செயற்பட்டனர் என்பது இதற்குச் சிறந்த உதாரணமாகும். அப்போதைய இராணுவத் தளபதியால் தனியாருக்குச் சொந்தமான காணியில் அடிக்கல் நடப்பட்டே இந்த விகாரை கட்டப்பட்டிருக்கிறது.
அடிக்கல் நடப்பட்ட சில நாள்களிலேயே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இந்த விடயம் விவாதிக்கப்பட்டது. அதில் யாழ். மாவட்டச் செயலர், தெல்லிப்பழை பிரதேச செயலர், வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தவிசாளர் மற்றும் செயலாளர்; ஆகியோர் கலந்துகொண்டு, தையிட்டி திஸ்ஸ விகாரையானது தனியார் காணியில் இருப்பதும், இந்த காணியானது எந்த விகாரைக்கும் சொந்தமானது அல்ல என்பதையும் உறுதிப்படுத்தியிருந்தனர். குறித்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் மேற்கொண்டு எந்தவொரு கட்டுமான நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது என்றும், கட்டுமான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் தீர்;மானம் நிறைவேற்றப்பட்டிருந்த நிலையிலும், இராணுவமே சட்டவிரோத விகாரையை கட்டியது.
குறித்த விடயம் தொடர்பாக கடந்த வருடம் டிசெம்பர் 13ஆம் திகதி கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் தலைமையிலான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும், 2025ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிய ஜனாதிபதி அநுரகுமாரவின் தலைமையிலான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் சுட்டிக்காட்டப்பட்டது. இவற்றில், தையிட்டி திஸ்ஸ விகாரை கட்டப்பட்டுள்ள நிலம் தனியாருக்கு சொந்தமான நிலம் என்றும், எந்தவொரு முறையான சட்ட நடைமுறையும் இன்றி, சட்டவிரோதமாகவே விகாரை கட்டப்பட்டது என்றும், இந்த விடயம் குறித்து முடிவெடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டிருந்தேன்.

**நாடாளுமன்றத்தில் உதயனின் செய்தி**

இந்த நாடாளுமன்றத்தின் குழுக்களின் பிரதித் தலைவரிடம் புதியதொரு விடயத்தைக் கொண்டுவருகின்றேன். அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் எழுதிய கடிதம் தொடர்பாக இன்றைய (நேற்றைய) உதயன் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அந்த விடயம் தொடர்பான கடிதத்தை இன்று சபையில் சமர்ப்பிக்கிறேன். அந்தக் கடிதத்தில் அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் தலைவர் என்று கையொப்பம் இட்டுள்ள, சந்திரா நிமல் வாக்கிஸ்கா என்பவர், தையிட்டி திஸ்ஸ விகாரைக் கட்டுமானமுள்ள 6 ஏக்கர் காணியும், உண்மையில் தனியாருக்குச் சொந்தமானதான இருக்கும் நிலையில், சட்டவிரோத விகாரை அமைக்கப்பட்டுள்ள இடம் தேவநம்பிய திஸ்ஸ மன்னன் காலத்தில் இருந்து திஸ்ஸ விகாரைக்கு சொந்தமானது எனவும், திஸ்ஸ விகாரைக்கு 14 ஏக்கர் காணி இருந்ததெனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். எனவே, தனியாருக்குச் சொந்தமான காணிகளையும், அதனுடன்சேர்த்து மேலும் பல ஏக்கர் நிலத்தையும் பறிமுதல் செய்து வழங்க வேண்டும் என்றும், தனியாருக்கு சொந்தமான காணிகளை காணி உரிமையாளர்களிடம் ஒப்படைக்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.
குழுக்களின் பிரதித் தலைவரே, இராணுவம் ஒரு இனவாத கட்டமைப்பில் செயற்படுகின்றது என்று நான் குறிப்பிடுவது இதனால்தான். அது அதன் மனநிலையிலிருந்து மாறவில்லை. நான் கூறும் கூற்றுக்களில் ஓரளவு உண்மை இருப்பதாக நீங்கள் கருதினால் நீங்கள் சட்டபூர்வ செயல்முறையொன்றுக்கு செல்ல வேண்டும். இராணுவமென்றால் எந்தச் சட்டத்தையும் மீறலாம் என்ற நிலை இருக்கமுடியாது. காட்டுச் சட்டங்களைப் பிரயோகிக்க முடியாது. ஆனால் இன்னும் அந்த அடிப்படையிலேயே அவர்கள் செயற்படுகிறார்கள்.
இந்தக் கடித்தை எழுதியிருந்த அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் தற்போதைய தலைவர் யார் என்று நான் தேடியபோது, அவர் தேசிய புலனாய்வு பிரிவின் முன்னாள் பணிப்பாளராகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபராகவும் செயற்பட்ட ஒருவராவார். எனவே, இங்கே ஒழுங்கமைக்கப்படும் இத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளின் இணைப்பை நீங்கள் பார்க்கலாம்.
இந்த அரசாங்கம் இனவாதக் கொள்கைகளை பின்பற்றப் போவதில்லை என்றும், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டப் போகிறது என்றும் கூறிய உறுதிமொழிகளுக்கு உண்மையாக இருக்குமாயின் சட்டம் நியாயமானதாக இருக்க வேண்டும். எவரும் சட்டத்தை மீறுவதற்கு அனுமதிக்கமுடியாது.
எனவே தனியார் காணிகளில் கட்டப்பட்ட இந்த தையிட்டி சட்டவிரோத திஸ்ஸ விகாரை விவகாரத்தை எப்படி கையாள்கிறது என்பதை பொறுத்தே இந்த அரசாங்கம் இனவாதமுடையாதா? இல்லையா? என்பது புலப்படும். திஸ்ஸ விகாரைக்கு சொந்தமான நிலத்தில் விகாரை அமைக்கக் கூடியதாக இருந்தும், இந்தச் சட்ட விரோதச் செயலுக்காக தனியாருக்குச் சொந்தமான நிலத்தை அபகரிக்க அவர்கள் தேர்வு செய்திருப்பது விரும்பத்தகாத ஒன்றாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார். (அ-ம-26)

## இடமாற்றம்!...

ச.மஞ்சுளாதேவி, கரவெட்டி பிரதேச செயலாளராக திருமதி ம.உமாமகள், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளராக ஈ.தயாரூபன் ஆகியோர் பொதுச்சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளனர்.
கோப்பாய் பிரதேச செயலாளராகக் கடமையாற்றி வந்த ச.சிவஶ்ரீ முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலாளராக, பொதுநிர்வாக உள்நாட்டு அலுவலர்கள் அமைச்சின் வருடாந்த இடமாற்றின் அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும், அவர் தனது இடமாற்றத்தை எதிர்த்து பொதுச்சேவை ஆணைக் குழுவுக்கு மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டுக்கு அமைவாக பொதுச்சேவை ஆணைக்குழுவின் மீளாய்வுகளின்படி கோப்பாய் பிரதேச செயலாளராக தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளார்.
கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரான திருமதி ச.மஞ்சுளாதேவி இதற்கு முன்னர் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளராகவும், கரவெட்டி பிரதேச செயலாளரான திருமதி ம.உமாமகள் இதற்கு முன்னர் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளராகவும், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளரான ஈ.தயாரூபன் இதற்கு முன்னர் கரவெட்டி பிரதேச செயலாளராகவும் கடமையாற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.
இந்த இடமாற்றங்கள் தொடர்பில் மேலும் சில பிரதேச செயலாளர்கள் மேன்முறையீடுகளை மேற்கொள்ளவுள்ளனர் என்றும் தெரியவருகின்றது. (அ-ம-125)

## குற்றச்சாட்டுகள்...

லில் கோத்தாபய மேலும் தெரிவித்ததாவது:-
தயவுசெய்து, ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையை படியுங்கள், குற்றப்புலனாய்வு அதிகாரிகள் வழங்கியுள்ள சாட்சியங்கள் உட்பட பல விடயங்கள் அதில் உள்ளன. குறித்த அறிக்கையில் உள்ளதைத் தவிர வேறு எதுவும் எனக்கு தெரியாது என்றார்.
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் முன்னாள் அமைச்சர் பிள்ளையானின், முன்னாள் இணைப்புச் செயலாளர் ஆசாத் மௌலானா, கோத்தாபய மீதும், பிள்ளையான் மீதும் முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவு பிரதானி சுரேஷ் சலே மீதும் சரமாரியான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருந்தார்.
'கோத்தாபய ராஜபக்சவை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்காகவே உயிர்த்தஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்டது. முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவு பிரதானி சுரேஷ் சலே, பிள்ளையான் (சிவனேசதுரை சந்திரகாந்தன்) ஆகியோர் இந்தத் தாக்குதலுக்கான சதி முயற்சிகளை மேற்கொண்டனர்' என்று அவர் தனது கருத்துக்களைப் பதிவுசெய்திருந்தார்.
இதைத் தொடர்ந்து சுவிற்சர்லாந்தில் தற்போது வசித்துவரும் ஆசாத் மௌலானாவை நாட்டுக்கு அழைத்துவந்து மேலதிக விசாரணைகளை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## குற்றவாளிகளின்...

முறையீட்டு மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.
குறித்த மேன்முறையீட்டு மனுக்கள் நேற்று நீதிபதிகள் பிரீத்தி பத்மன் சூரசேன, ஜனக் டி சில்வா மற்றும் சம்பத் அபேகோன் ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வுக்கு முன்பாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இதன்போது, சம்பந்தப்பட்ட மேன்முறையீட்டு மனுக்களை ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிபதிகள் குழு தீர்மானித்துள்ளது.
2015ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சிவலோகநாதன் வித்தியா என்ற பாடசாலை மாணவி கடத்தப்பட்டு, வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்ட வழக்கில் 7 பேருக்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் அமர்வு மரண தண்டனை விதித்தது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## நியாயமான...

செய்யப்படவில்லை. தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை உண்மையில் போதாது என்று கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.
விவசாயிகள் மேலும் தெரிவித்ததாவது: கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்போக அறுவடை நிறைவடைந்துள்ள நிலையில், அரசாங்கத்தால் நெல்லுக்கு நிர்ணய விலையாக சிவப்பு நெல்லுக்கு 120 ரூபாவும், சம்பா நெல்லுக்கு 125 ரூபாவும், கீரிச்சம்பா நெல்லுக்கு 132 ரூபாவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
பயிரழிவுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை இம்முறை விவசாயிகள் எதிர்கொண்ட நிலையில், இந்த விலை நிர்யணம் உண்மையில் எமக்குத் திருப்தியில்லை. 140 ரூபாவாவது நெல்லுக்கு நிர்யண விலையாக வழங்கப்பட்டிருந்தால், எமது பாதிப்பை இழப்பை ஓரளவு ஈடுசெய்திருக்க முடியும். ஆனால், அரசாங்கமோ மிகவும் குறைந்த விலையைத்தான் இம்முறை நிர்ணயித்துள்ளது. எனவே, அரசாங்கம் நியாயமான விலையில் நெல்லைக் கொள்வனவு செய்ய முன்வர வேண்டும் - என்றனர். (அ-ம-113)

**(தொடர்புடைய செய்தி: பக்கம்:05)**

## யாழ்...

இறக்கப்பட்டு, அதற்கு பதிலாக கறுப்புக் கொடி ஏற்றப்பட்டுள்ளது. உதயன் உள்ளிட்ட தமிழ் நாளிதழ்களில் இது தொடர்பான செய்தி முதல் பக்கத்தில் வெளிவந்துள்ளது.
சுதந்திர தினத்தன்று தேசியக்கொடி ஏற்றப்பட வேண்டிய பல்கலைக்கழகத்தின் பிரதான கம்பத்தில் இருந்த கொடியே கீழ் இறக்கப்பட்டு, கறுப்புக்கொடி ஏற்றப்பட்டுள்ளது. போரில் இருந்து இந்நாட்டுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்த இராணுவத்தை அவமதிக்கும் வகையிலேயே இவ்வாறு செயற்பட்டுள்ளனர். எனவே, இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, தண்டனை பெற்றுக்கொடுக்கப்படவேண்டும்.
இதற்கு இடமளித்தமை குறித்து யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர் குழாமும் பொறுப்புக்கூற வேண்டும். இது தொடர்பில் அவர்களிடம் விளக்கம் கோரப்பட வேண்டும். யாழ். பல்கலைக்கழகமும் மக்கள் வரிப்பணத்தில் தான் இயங்குகின்றது. எனவே, தேசியக்கொடி அவமதிக்கப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாத செயலாகும். இந்தச் செயலில் ஈடுபட்டவர்களை கைது செய்யுமாறு கோருகின்றோம்.
சுதந்திர தினத்துக்கு முன்னதாக ஜனாதிபதி யாழ். சென்றார், மக்களுடன் கலந்துரையாடினார். இனவாதத்தை தூண்டுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெளிவாக அறிவித்திருந்தார். எனவே, தேசியக் கொடியை அவமதித்து, தென்னிலங்கையில் இனவாதத்தை தூண்டும் வகையில் செயற்பட்டுள்ள நபர்களுக்கு எதிராக முதலில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
எமது நாட்டின் தேசியக் கொடியை ஏற்க மறுப்பவர்களை தேசத் துரோகிகளாகவே கருத வேண்டும். இவர்களுக்கு புலிகள் அமைப்புடன் தொடர்புள்ளதா என்பது பற்றி புலனாய்வுப் பிரிவு ஆராயவேண்டும் - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபாகரனை...

சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
மேற்குலக நாடுகளை பகைத்துக் கொண்டுதான் மஹிந்த ராஜபக்ச போரை முடிவுக்கு கொண்டுவந்தார். போர் முடிவடைவதற்கு இரு வாரங்களுக்கு முன்னதாக இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் வந்தனர். அமெரிக்காவில் இருந்தும் குழுவொன்று வந்தது. போரை நிறுத்துமாறு மஹிந்த ராஜபக்சவிடம் அவர்கள் வலியுறுத்தினர். ஏனெனில் பிரபாகரனை உயிருடன் கொண்டு செல்ல முயற்சித்தனர். அவர்களின் கோரிக்கைக்கு செவிமடுக்காமல் மஹிந்த போரை முடிவுக்கு கொண்டுவந்தார்.
1987ஆம் ஆண்டு வடமராட்சி சமரின் போது இந்தியா பருப்புப் போட்டவேளை, ஜே.ஆர். ஜயவர்த்தன போரை நிறுத்தினார். அன்று போரை நிறுத்தியிருக்காவிட்டால் நான்கு அல்லது ஐந்து நாள்களில் போர் முடிவுக்கு வந்திருக்கும்.
வெளிநாடுகளுக்கு பணிந்தே அன்று போரை நிறுத்தினார்கள். ஆனால், மஹிந்த ராஜபக்ச வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அடிபணியவில்லை. அதனால்தான் மஹிந்தவுடன் மேற்குலகம் பகையாக உள்ளது. தமிழ் பிரிவினைவாத புலம்பெயர் மக்களும் மஹிந்த மீது பகையில் உள்ளனர். மஹிந்தவுக்கு இப்போதும் பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது - என்றார். (அ-ம-44)

## 43 நாடாளுமன்ற...

ளுமன்ற உறுப்பினர்களால் பெறப்பட்ட இழப்பீடுகள் தொடர்பான விவரங்களை, ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சபையில் நேற்று முன்வைத்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அரகலய போராட்டத்தின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் என்றுகூறி பெருமளவு தொகையை இழப்பீடாகப் பெற்றுள்ளனர்.
இதன்படி, ஜனக பண்டார தென்னக்கோன் ஒரு கோடியே 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும், ரோஹித அபேகுணவர்த்தன ஒரு கோடியே 16 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவையும், சீதா அரம்பேபொல ஒரு கோடியே 37 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவையும், சான் பிரதீப் ஒரு கோடியே 71 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவையும் இழப்பீடாக பெற்றுள்ளனர்.
அத்துடன், செயான் சேமசிங்க ஒரு கோடியே 85 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவையும், இந்திக்க அநுருத்த ஒரு கோடியே 95 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும், மிலான் ஜயதிலக்க 2 கோடியே 23 லட்சம் ரூபாவையும், ரமேஷ் பத்திரண 2 கோடியே 81 லட்சம் ரூபாவையும், துமிந்த திஸாநாயக்க 2 கோடியே 88 லட்சம் ரூபாவையும், கனக ஹேரத் 2 கோடியே 92 லட்சம் ரூபாவையும் அரசாங்கத்திடமிருந்து இழப்பீடாக பெற்றுள்ளனர்.
மேலும் டி.பி. ஹேரத் 3 கோடியே 21 லட்சம் ரூபாவையும், பிரசன்ன ரணவீர 3 கோடியே 27 லட்சம் ரூபாவையும், சாந்த பண்டார 3 கோடியே 91 லட்சம் ரூபாவையும், எஸ்.சந்திரசேன 4 கோடியே 38 லட்சம் ரூபாவையும், சனத் நிஷாந்த 4 கோடியே 27 லட்சம் ரூபாவையும், சிறிபால கம்லத் 5 கோடியே 9 லட்சம் ரூபாவையும், அருந்திக்க பெர்ணான்டோ 5 கோடியே 52 லட்சம் ரூபாவையும், பிரசன்ன ரணதுங்க 5 கோடியே 62 லட்சம் ரூபாவையும், கோகிலா குணவர்தன 5 கோடியே 87 லட்சம் ரூபாவையும், நிமல் லான்சா 6 கோடியே 92 லட்சம் ரூபாவையும், அலி சப்ரி ரஹீம் 7 கோடியே 9 லட்சம் ரூபாவையும், ஜொன்ஸ்டன் பெர்ணான்டோ 9 கோடியே 34 லட்சம் ரூபாவையும், கெஹலிய ரம்புக்வெல 9 கோடியே 59 லட்சம் ரூபாவையும் இழப்பீடாக பெற்றுள்ளனர்.
விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டாலோ, அனர்த்தத்தால் வீடுகள் பாதிக்கப்பட்டாலோ இழப்பீட்டை பெறுவதற்கு மக்கள் எவ்வளவு கஷ்டப்பட வேண்டும். ஆனால் அதிகாரத்தைப் பயன்படுத்தி, அரசாங்க அதிகாரிகளை மிரட்டியே அரசியல்வாதிகள் மிக இலகுவாக பெருமளவு இழப்பீட்டை பெற்றுள்ளனர். இப்படியான அரசியல் கலாசாரமே எமது நாட்டில் இருந்தது. இதனையே மாற்றிவருகின்றோம். இப்படியான நபர்களே ஒன்றிணைவது தொடர்பில் தற்போது பேச்சு நடத்திவருகின்றனர் - என்றார். (அ-ம-6)

## இந்துக்களின்...

இன்று ஆரம்பிக்கும் இந்தப் போட்டி, நாளை சனிக்கிழமை வரை இரண்டு நாள்களைக் கொண்டதாக நடைபெறவுள்ளது.
கொழும்பு இந்துக் கல்லூரி அடுத்த வருடம் தனது பவளவிழாக் கொண்டாட்டங்களை மிகவும் பிரமாண்டமான முறையில் ஆரம்பிக்கவுள்ளமையால் இந்துக்களின் சமரையும் அந்தக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது. இதனால், கொழும்பு இந்துக் கல்லூரியின் வேண்டுகோளுக்கு அமைய இம்முறை போட்டியை நடத்துவதற்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்வந்துள்ளது.
இந்துக்களின் பெரும் சமரின் மற்றொரு விடயமான, இரு பாடசாலை அணிகளுக்குமிடையிலான 'சொல்லாடல்2025 நிதர்சனத்தின் களம்' விவாதப் போட்டி இன்று மாலை 6 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் நடைபெறவுள்ளது. 'ஈழமணித் திருநாட்டிலே தமிழ்மக்கள் எதிர்நோக்கும் அன்றாட இடர்களுக்குப் பெரிதும் காரணமாக இருப்பவர்கள் அரச ஊழியர்களைக் காட்டிலும் அரசியல்வாதிகளே!' எனும் தலைப்பை ஆதரித்தும், மறுதலித்தும் குறித்த விவாதச் சமர் இடம்பெறவுள்ளது. (அ-ம-66)

## அர்ச்சுனா...

நீதிமன்றம் அறிவித்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா அரச பொதுச்சேவையில் தற்போது உள்ளார். எனவே அவர் நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவதற்குத் தகுதியற்றவர் என்று அறிவிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
இந்த வழக்குக் ஜனவரி மாதம் 31ஆம் திகதி நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுதாரர் சார்பில் சட்டத்தரணி என்.கே.அசோக்பரன் நீதிமன்றத்தில் முன்னிலையானார். சுகாதார அமைச்சின் சார்பில் மேலதிக மன்றாடி நாயகம் சுமதி தர்ம வர்த்தன முன்னிலையானார்.
இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, தற்போதும் பதவியில் தொடர்கின்றார் என்று, சுகாதார அமைச்சின் சார்பில் அதன் செயலாளரால் சத்தியக் கூற்று நிறைவேற்றப்பட்டு நீதிமன்றத்தில் அணைக்கப்பட்டுள்ளது.
நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவின் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி, தமது தரப்பு சமர்ப்பணத்தை முன்வைக்க நீதிமன்றத்தில் அவகாசம் கோரியுள்ளார். தொடர்ந்து வாதங்கள் மற்றும் சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிமன்றம், இந்த வழக்கை மே மாதம் 14ஆம் திகதி விவாதத்துக்கு எடுப்பதற்குத் தீர்மானித்துள்ளது.
நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தற்போதும் பொதுச்சேவையில் உள்ளார் என்று சத்தியக் கடதாசி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், அவரின் பதவி பறிபோவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன என்று சட்டவல்லுநர்கள் பலரும் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

**வேலையாள் தேவை**
- வெல்டிங் வேலையாள், வெல்டிங் உதவியாளர்
- வாகன சாரதி
- கிராபிக்ஸ் டிசைனர்
- சமையலாளர் (ஆண், பெண்) இருபாலாரும்

பிறிண்டிங் துறையில் பழக விரும்புவர்களும் விண்ணப்பிக்கலாம்.
SS.பிறிண்டேர்ஸ் (PVT) Ltd
168A நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
077 382 0798
(CS/57439) J-1

**வேலையாட்கள் தேவை**
அரியாலையில் இயங்கும் பல்பொருள் அங்காடி (சுப்பர் மார்க்கட்) ஒன்றிற்கு பெண்கள் விரும்பத்தக்கது. (அரியாலை பிரதேசத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)
(அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
தொடர்பு: 077 540 0425

**மலிவு விற்பனை**
150/- இற்கு விற்பனை செய்யப்படும் அனைத்து பூங்கன்றுகளும் 100/- விற்கு விற்பனை செய்யப்படுகின்றன.
075 944 4601

**ஈரப்பலாக்காய் விற்பனைக்கு**
அச்சுவேலி தெற்கில் ஈரப்பலாக்காய் மரத்துடன் விற்பனைக்கு உண்டு.
077 036 6419
(CS/29609) J-1

**பெண் சமையலாளர் தேவை**
குடும்பம் ஒன்றிற்கு மானிப்பாய் வீதி, ஆறுகால் மடத்திலிருந்து 1Km க்குள் வதியும் பெண் சமையலாளர் தேவை.
075 944 4601
(CS/57429) J-1

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**
கல்வியங்காடு சந்தியிலிருந்து 100m தூரத்தில் வீதி ஓரமாக உள்ள வீடும் 1 பரப்பும் 3 குளியும் கொண்ட காணியும் நல்ல தண்ணீர் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 229 4985
(CS/57430) J-1

## அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு



கடந்த 10.01.2025 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி
**அமரர் தியாகராஜா தங்கம்மா**
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.02.2025) வெள்ளிக்கிழமை காலை 8:00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறுவதுடன், நாளைமறுதினம் (09.02.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் மதிய போசன நிகழ்வும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்
இவ் அழைப்பை தனிப்பட்ட
திக்கம்புரை, வயாவிளான். குடும்பத்தினர்
(CS/57376) J-1

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25 . 11 . 1935



மறைவு
20 . 01 . 2024


கடந்த 20.01.2024 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தாயார்
**அமரர் கணபதிப்பிள்ளை சரஸ்வதியம்மா**
திதி : தசமி (07.02.2025)

அவர்களின் 1ம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (07.02.2025) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இன்றைய தினம் நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
இல 7/6 இராமநாதபுரம்,
கிளிநொச்சி. குடும்பத்தினர்.
(CS/57277) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 . 05 . 1953



உதிர்வு 26 . 01 . 2018


## அமரர் வி.எம்.கணபதிப்பிள்ளை புலேந்திரன்

(உரிமையாளர் - நியூ V.M.K. ஜுவல்லர்ஸ் - இல. 15, நவீனசந்தைக் கட்டடம், கண்டி வீதி, சாவகச்சேரி)

ஸ்தாபகர் - V.M.K. மில்ஸ்

**திதி: 07.02.2025 வளர்பிறை தசமி**

இலைவடிவில் இதயம் இருக்கும்
அதில் மலைவடிவில் உன் நினைவும் கனக்கும்!!
பாசமுள்ள அப்பாவே பாசமுடன் நாமிருக்கையில் பாரினிலே
எமை தவிக்க விட்டு எங்கு சென்றீர்??
துன்பம் என்ற சொல்லை நீங்கள்
பிரியும் வரை நாங்கள் அறியவில்லை
மீண்டும் ஒருமுறை எமை வாய் விட்டு அழைக்க மாட்டீர்களா ?
ஆற முடியாத சோகம் தான் இங்கே ஆறு ஆண்டுகள்
உருண்டு சென்றாலும் என்றென்றும் மறவோம்
இன்றைக்கல்ல என்றைக்கும் நீங்கள் எம் பக்கத்தில் நேசமுடன்
வாழ்ந்து கொண்டே இருப்பீர்கள்!!
உங்கள் நினைவுகளுடன் நாமும் என்றென்றும்
வாழ்ந்து கொண்டிருப்போம்.



ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**கண்டி வீதி, சாவகச்சேரி.** (CR/44242) J-1 **V.M.K. குடும்பத்தினர்.**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.